Vol : 9 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் Issue : 3

Price Rs. 3

# HUNDRED VILLAGE MINISTRY

JANUARY 2009

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विल्लेज मिनिस्ट्री ഹണ്‍ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

Annual Subscription India Rs.25 Foreign Rs.250

# 100- கிராம ஊழியம்

TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை

WE WISH YOU A HAPPY NEW YEAR 2009




**TVGM - 2009 ஜனவரி**

**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

வெளி.21:5 **இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்.**

கர்த்தருடைய கிருபையினால்
ஈரோடு – தட்டாங்காடு (பசுவப்பட்டி)
கிராமத்தில் கட்டப்பட்ட
**"இயேசுகிறிஸ்துவின் சபை"**
ஜெபவீட்டை 12.11.2008 அன்று
மாலை **பாஸ்டர் விக்கி** அவர்கள்
தேவனுடைய நாம மகிமைக்கென்று
பிரதிஷ்டை செய்தார்கள்.

Thanks : Pastor Viki,
Elim Christian Centre
Auckland, Newzealand



## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**TAMIL VILLAGE GOSPEL MISSION**
**CHIEF EXECUTIVE OFFICER**
காரியதரிசி கடித நாள்: 03.12.08.



**கி**றிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு!

TVGM ஊழியத்தின் சார்பாக புத்தாண்டு வாழ்த்துக்களை கூறிக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு தங்களின் வாழ்க்கையில் சிறந்த ஆசீர்வாதங்கள் நிறைந்ததாயிருந்தது என நம்புகிறேன். இந்தப் புத்தாண்டு அதிலும் மேலான ஆசீர்வாதங்களை தங்கள் வாழ்வில் கொண்டு வர ஜெபிக்கிறேன்.

TVGM சரித்திரத்தில் 2008ம் ஆண்டு ஒரு மறக்க முடியாத மைல் கல்லாக திகழ்ந்தது. ஏனெனில் 28 ஜெபவீடுகள் ஆலயமில்லாத கிராமங்களில் கட்டப்பட்டதோடு ஒவ்வொரு மாதமும் 10,000 சுவிசேஷப் புத்தகங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டிலும் தேவன் தமது சித்தத்தின்படி இதிலும் மேலான காரியங்களை நடப்பிப்பார் என விசுவாசிக்கிறேன்.

இவ்வாண்டில் சுவிசேஷப் புத்தகங்கள் விநியோகித்தல், சபைகள் நிறுவுதல் போன்ற பின்தொடர் ஊழியங்கள் செய்து தாங்கள் இருக்கும் பணி ஸ்தலங்களில் சாட்சிகளாக விளங்க **தலைமைத்துவ மையம்** ஒன்று அமைத்து வலிமையான கிறிஸ்தவத் தலைவர்களை உருவாக்க திட்டமிட்டு வருகிறோம். உங்கள் தொடர்ச்சியான ஜெபமும், ஆதரவும் தேவை.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

கிறிஸ்துவுக்குள்,
***Stephen Christopher.***

## உள் பக்கம் ...


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| Wrapper – வாக்குத்தத்தம் | Photos |
| Wrapper - Inner | Photos |
| காரியதரிசி கடிதம் | 1 |
| புத்தாண்டு சிறப்பு செய்தி | 2 - 4 |
| Hindi, Malayalam, English | 5 - 8 |
| திருச்சி 100 கிராம ஊழியம் | 9 |
| திருச்சி சுற்றுவட்டாரப் பகுதி 100 கிராம ஊழிய அறிக்கை | 10 -13 |
| சாட்சிகள் | 14 |
| தலைமைத்துவ மையம் அமைக்க திட்டமிடுவது ஏன்? | 15 |
| 2008ல் வல்லமையுடைவர் செய்த மகிமையான காரியங்கள் | 16 -17 |
| சிறுவர் இல்லம் | 18 |
| தினசரி ஜெபக்குறிப்புகள் | 19 |
| காணிக்கை அனுப்பும் முறை அறிமுகப்பணி அலுவலகம் | 20 |
| போட்டோக்கள் Wrapper | W 3 |
| போட்டோக்கள் Wrapper | W 4 |


## உங்கள் கவனத்திற்கு!

1. 2009ம் ஆண்டிற்கான **'100–கிராம ஊழியம்'** பத்திரிக்கை சந்தா செலுத்தி விட்டீர்களா? அநேக வருடங்களாக சந்தாவைப் புதுப்பிக்க தவறியவர்களுக்கு தொடர்ந்து பத்திரிக்கை அனுப்ப முடியாத நிலையிலுள்ளோம். ஆகவே உடனே புதுப்பித்துக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.
2. உங்கள் முகவரி மாறும்போது புதிய, பழைய முகவரியை தவறாமல் தெரியப்படுத்தி உதவுங்கள்.
3. ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிக்கை வருமானாலும் தயவுசெய்து முகவரியை தெளிவாக எழுதி தெரியப்படுத்துங்கள்.

# உங்களுக்கு எங்கள் அன்பின் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!



# இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன். வெளி. 21 : 5

புத்தாண்டில் கர்த்தருடைய வாக்குத்தத்திற்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே!

இதோ, கர்த்தருடைய வார்த்தை உங்களுக்கு நேராக கடந்து வருகிறது:

**<u>வெளி.21:5</u>**

**சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்** என்றார். பின்னும், அவர்: இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார்.

ஆம்! சிங்காசனத்தில் வீற்றிருக்கும் நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்.** என்று இப்புதிய ஆண்டில் உங்களுக்கு வாக்களிக்கிறார்.

புதிய ஆண்டிற்குள்ளே பிரவேசிக்கிற நமக்கு புதிய மகிழ்ச்சி. பொதுவாக புதிய பொருள், புதிய வீடு, புதிய கார், புதிய புடவை, புதிய மிக்ஸி என்று புதிதாக ஒன்று கிடைக்கும் போது பெரியோர் முதல் சிறியோர் வரை மிகுதியான சந்தோஷம் அடைவதைப் பார்க்கிறோம்.

எனக்கன்பான கர்த்தருடைய பிள்ளைகளே!

**<u>வெளி.21:1</u>–**ல் யோவான் கூறுகிறார்:

நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று.

ஆம்! முந்தின வானமும் பூமியும் ஒழிந்து போயின, புதிய வானம் பூமியை கண்டேன் என்று கூறுகிறார்.

ஆம்! என் அன்பு கர்த்தருடைய பிள்ளைகளே!

இது ஒரு எளிதான காரியம் அல்ல. இது வானத்தையும் பூமியையும் உண்டாக்கிய தேவனாலே ஆகும். அவராலே கூடாத காரியம் ஒன்றுமே யில்லை.

கர்த்தரை விசுவாசிக்கிறவர்களே! கர்த்தருக்காக காத்திருக்கும் தேவ பிள்ளையே!

நாம் எதிர்பார்க்கும் காரியம் நடக்க வேண்டுமானால் அல்லது புதிய காரியம், புதிய வேலை, புதிய தரிசனம், புதிய வார்த்தை, புதிய வாழ்க்கை, புதிய இரட்சிப்பு, புதிய அபிஷேகம் வேண்டு மானால், முந்தினவைகள் அதாவது பழையவைகள் நமக்குள் இருந்து ஒழிந்து போக வேண்டியது அவசியமா யிருக்கிறது.

**2கொரி.5:17** கூறுகிறது:

**ஒருவன்**
**கிறிஸ்துவுக்குள்ளிருந்தால்**
**புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்;**
**பழையவைகள் ஒழிந்துபோயின,**
**எல்லாம் புதிதாயின.**

இந்தப் புதிய ஆண்டில் முதலாவது நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோமா? அல்லது வெளியே இருக்கிறோமா? என்பதை ஆராய்ந்து பார்த்து சரிபடுத்த வேண்டும்.

**2கொரி.4:16**ல் பவுல் கூறுகிறார்:

நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை;
எங்கள் புறம்பான மனுஷனானது
அழிந்தும், உள்ளான மனுஷனானது
**நாளுக்குநாள்**
**புதிதாக்கப்படுகிறது.**

எனக்கன்பான தேவபிள்ளைகளே!

இந்த உலகத்தில் அழிந்து போகும் ஒரு பொருள் கிடைத்தாலே நமக்கு இவ்வளவு சந்தோஷம் இருக்கு மானால், அழியாத நித்திய ஜீவனை அடையும்படி நமது உள்ளான மனுஷ னானது புதிதாக்கப்படும் அனுபவம் எவ்வளவு மகிழ்ச்சியானது. அதுவும் **நாளுக்குநாள் புதிதாக்கப்படுதல்.**

புதிய ஆண்டிற்குள் பிரவேசித் திருக்கும் நீங்கள் கடந்த ஆண்டில் உங்கள் வாழ்க்கையில் எத்தனையோ மேடு, பள்ளங்கள், கவலை, கண்ணீர்கள், போராட்டங்கள் இவைகளால் இன்று துக்கத்தோடு, சோர்வினால் காணப்படுகிறீர்களா?

அப்போஸ்தலனாகிய பவுலைப் போல நாங்கள் சோர்ந்துபோகிற தில்லை. எங்கள் புறம்பான மனுஷ னானது அழிந்தும், உள்ளான மனுஷ னானது **நாளுக்குநாள் புதிதாக்கப் படுகிறது** என்று சொல்லிக் கொண்டே யிருங்கள். விசுவாசியுங்கள்.

**<u>கொலே.3:9,10</u>**

ஒருவருக்கொருவர்
பொய் சொல்லாதிருங்கள்;
பழைய மனுஷனையும் அவன்
செய்கைளையும் களைந்துபோட்டு,
தன்னை சிருஷ்டித்தவருடைய
சாயலுக்கொப்பாய்ப் பூரண
அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட
புதிய மனுஷனைத் தரித்துக்
கொண்டிருக்கிறீர்களே.

ஆம்! கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்.

எனவே இப்புதிய ஆண்டில் உங்களை சிருஷ்டித்த தேவனுடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிய மனுஷனை தரித்துக் கொள்ளுங்கள். பழைய மனுஷனை அதாவது பழைய பாவ கிரியைகளை உங்களை விட்டு களைந்து போடுங்கள்.

**<u>சங்கீதம் 51:10</u>**ல் தாவீது ஜெபிப்பதைப் போல நீங்களும் கருத்தாய் தேவசமூகத்தை நோக்கிப் பார்த்து ஜெபியுங்கள்.

**தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்யும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.** என்பதாக.

இப்புதிய ஆண்டில் உங்களுக்கு புதிதாக என்ன வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள் ? அது உங்களுக்கு கிடைக்கும் என்று விசுவாசியுங்கள்.

**<u>பக்தன் பாடுகிறார்:</u>**

**கடந்ததை நினைத்து கலங்காதே**
**நடந்ததை மறந்து விடு**
**கர்த்தர் புதியன செய்திடுவார்**
**இன்றே நீ காண்பாய்**
**கலங்கிடவே வேண்டாம்**
**கலங்கிடவே வேண்டாம்.**
**நம் இயேசு கைவிட மாட்டார்.**

பாடுங்கள். பாடிக் கொண்டே யிருங்கள். **உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.**

2009ம் ஆண்டில் கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் **சகலத்தையும் புதிதாக்குவார்.** ஆமென்.

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை மற்றும் புத்தாண்டு வாக்குத்தத்த தேவசெய்தி

**நாள் : 01.01.2009** வியாழக்கிழமை

**துதி ஆராதனை நேரம் :** காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை

**வாக்குத்தத்த செய்தி :** மாலை 7 மணி முதல் 8 மணி வரை

**புத்தாண்டு வாக்குத்தத்த செய்தியளிப்பவர்:**
**சகோ.P.T.கிறிஸ்டோபர்**

**நடைபெறுமிடம் : TVGM தலைமை அலுவலகம்,**
**100 – கிராமம், திருச்சி – 620 102.**




**நன்றி** 01.11.2008 அன்று நடைபெற்ற துதிஆராதனையில் பெரும் பங்கேற்று, வாக்குத்தத்த செய்தியளித்த பாஸ்டர் பவுல் ( வையப்பமலை ) அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

# இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை** அறிவித்தல்.

## விருதுநகர் மாவட்டம் - திருச்சுளி யூனியன்

## 100 - கிராம ஊழியம்

**<u>நோக்கம்:</u> 2009 ஜனவரி 19** திங்கள் காலை 9 மணி முதல் **ஜனவரி 23** வெள்ளி இரவு 10 மணி முடிய **விருதுநகர் மாவட்டம் – திருச்சுளி யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2009 ஜனவரி 19** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2009 ஜனவரி 23** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2009 ஜனவரி 19 - 23 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**<u>உபவாச ஜெபம் நடைபெறும் இடம்</u>**

**புதிய இந்தியா A.G. சர்ச்,**

**436, நரிக்குடி ரோடு** ( கீதா மருத்துவமனை எதிரில் )

**திருச்சுளி - 626 129.**

**அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.**

**செல் : 9487309864**

**<u>நன்றி</u>** : உதவி செய்ய முன் வந்த **பாஸ்டர் ஜீவானந்தம்** அவர்களுக்கு நன்றி!

**<u>தகுதி</u>** : ஆலயமில்லாத கிராமங்களில் **5** நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

**<u>பிரயாணப்படி</u>** : தமிழ்நாட்டிலிருந்து ரூ. 5 செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

**<u>முக்கிய அறிவிப்பு</u>** : 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

**<u>சகல தொடர்புகளுக்கும்</u>** : சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# திருச்சி சுற்று வட்டாரக் கிராமங்கள்
# 100-கிராம ஊழியம் அறிக்கை



54 கிராம ஊழியர்கள்

கர்த்தருடைய கிருபையால் திருச்சி பட்டணத்திற்கு அருகிலுள்ள ஆர்ச்சம்பட்டி, அதவத்தூர், சந்தோஷ்நகர் ஆகிய முக்கிய கிராமங்களை சுற்றியுள்ள கிராமங்களில் 100 கிராம ஊழியம் நடைபெற்றது.

10.11.2008 திங்கள் மற்றும் 11.11.2008 செவ்வாய் ஆகிய இரு தினங்கள் கிராம ஊழியர்களுக்கு TVGM தலைமை அலுவலகத்தில் விசேஷித்த பிரசங்கமும், சிறப்பு விருந்தும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.



சகோ. ஜான் ஜோசப்

இதற்கு தமிழ்நாட்டின் 15 மாவட்டங்களிலிருந்து 54 பேர் வந்திருந்தார்கள். முதல் நாள் கிராம ஊழியர் களுக்கு காலை 9 மணி முதல் இரவு 7 மணி வரை வேதாகம கருத்தரங்கு நடைபெற்றது. இதில் **சகோ.ஜான் ஜோசப்** அவர்கள் வேதகருத்துக்களை விளக்கிக் கூறி கிராம ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள். இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் **பாஸ்டர் விக்கி** அவர்கள் தலைமையில் வந்திருந்த 8 பேர் கொண்ட குழுவினர்கள் கலந்து கொண்டு கிராம ஊழியர்களை விசாரித்து, ஜெபித்து உற்சாகப்படுத்தினார்கள். **பாஸ்டர் விக்கி** அவர்கள் சிறப்பு தேவசெய்தியளித்தார்கள். **பாஸ்டர் விக்கி** குழுவினர் முன்பாக கிராம ஊழியர்கள் 13 குழுவாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியாக வட்டமாக கூடி தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள்.



பாஸ்டர் விக்கி குழுவினர்



குழுவாக ஜெபித்தல்



சிறப்பு விருந்து

பிறகு **பாஸ்டர் ஜோசப் ஜெபமணி** ***( Yishun Evangelical Church - Singapore )*** அவர்கள் சார்பில் கிராம ஊழியர்களுக்கு சிறப்பு விருந்தளிக்கப்பட்டது.

விருந்துக்குப் பின் கிராம ஊழியர்கள் தாங்கள் ஊழியம் செய்யப் போகிற அதவத்தூர் மெர்சி ஆர்க் சர்ச்சில் கூடி மீண்டும் ஜெபித்தார்கள். இதில் கிராம ஊழியர்களுக்கு அந்த சபையின் தலைமை போதகர் ஞானதாஸ் அவர்கள் தேவசெய்தியளித்து, இரவு உணவளித்தார்கள். பின்பு அவரவர் ஊழியம் செய்ய வேண்டிய கிராமங்களுக்கு பிரிந்து சென்றனர். இப்படி 3 நாள் ஊழியங்களை செய்து முடித்து மீண்டும் 14.11.2008 அன்று மாலையில் அதவத்தூர் மெர்சி ஆர்க் சர்ச்சில் கூடி ஜெபித்து, கர்த்தர் தங்களை கிராமங்களில் எப்படியாக எடுத்து பயன்படுத்தினார் என்பதை சாட்சியாக சொல்லி தேவனை மகிமைப்படுடுத்தினார்கள். மொத்தம் 8194 வீடுகளுக்கு வீட்டிற்கொரு யோவான் சுவிசேஷம் வீதம் இலவசமாக கொடுத்து கர்த்தரைப் பிரஸ்தாபப்படுத்தினார்கள். இதோடு 11,000 கைப்பிரதிகளும், 7000 சிலுவைக்கொடிகளும் கொடுத்து ஊழியம் செய்தார்கள்.

இந்த ஊழியத்தின் போது கிராமங்களில் சந்திக்கப்பட்டவர்களில் 126 பேர் தங்களுடைய முகவரியைக் கொடுத்து வேதபாடங்களை தபால் மூலம் அனுப்பக் கேட்டார்கள். இந்த கடைசி நாள் கூட்டத்திலும் மெர்சி ஆர்க் சர்ச் தலைமை போதகர் ஞானதாஸ் அவர்கள் தேவசெய்தியளித்து, கிராம ஊழியர்களுக்கு இரவு உணவும், இனிப்பும் வழங்கினார்கள். டி.வி.ஜி.எம்.மூலம் பிரயாணப்படி வழங்கப்பட்டது.

## கிராம ஊழியர்களின் சில அனுபவ சாட்சிகள் :-

**குழு 1: பாஸ்டர் ஆல்வின், சகோ. இம்மானுவேல், ஜெபமலைநாதன், இஸ்தாக்கி.**

எங்களுக்கு கொடுத்திருந்த 6 கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்தோம். போதாவூர் கிராமத்தில் இளஞ்சிஅம்மா, மாரியாயி ஆகிய இரண்டு பெண்கள் எங்களிடம் வந்து இயேசுவைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்று ஆர்வமாக கேட்டார்கள். இவர்களுக்கு தெளிவாக விளக்கினோம். சிங்கப்பூர் கிராமத்தில் ஊழியம் செய்த போது, ஆறுமுகம் என்பவர் எங்களை அழைத்து குடிக்கிறதற்கு கலர் வாங்கிக் கொடுத்து இயேசுவைப் பற்றி கேட்டார். இவருடைய எல்லா சந்தேகங்களுக்கும் வேதத்தின் அடிப்படையில் பதில் கூறி ஜெபித்து வந்தோம். மொத்தம் 600 சுவிசேஷப் புத்தகங்களும்,570 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 2: சகோ.தாஹாகனி,எபிநேசர், சகாயராஜ், யோசுவா.**

நாங்கள் 11 கிராமங்களில் யோவான் புத்தகம் கொடுத்தோம். அனைவரும் ஆர்வமுடன் சுவிசேஷத்தைக் கேட்டனர். வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். மொத்தம் 800 சுவிசேஷப் புத்தகங்கள், 550 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 3: சகோதரி மரியம்மாள், அந்தோணியம்மாள், ஜோதிமணி, கிருபா பழனியம்மாள்.**

நாங்கள் ஊழியம் செய்த கிராமங்களில் மக்கள் ஆர்வமுடன் புத்தகங்களைப் பெற்றுக் கொண்டு, நாங்கள் சொல்லிய வார்த்தைகளை கவனமாகக் கேட்டார்கள். சின்னப்புத்தூர் கிராமத்தில் விஜயகாந்த் என்பவர் குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டு சபைக்கு வருகிறோம். நாங்கள் எங்கே வரவேண்டும் என்று கேட்டார். நாங்கள் ஆர்ச்சம்பட்டி சபை முகவரியை தெரிவித்து, வரச் சொன்னோம். 500 சுவிசேஷப் புத்தகங்களும், 465 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 4: சகோதரி கிரேஸ் பத்மா, தெபோராள், டெய்சி மரகதம், செலின்.**

நெய்தலுார், ஆர்ச்சம்பட்டி கிராமங்களில் வீடுகள்தோறும் யோவான் புத்தகம் கொடுத்து சத்தியத்தை அறிவித்தோம்.

அநேகர் தங்களுக்காக ஜெபிக்கக் கேட்டனர். ஜெபித்தோம். மொத்தம் 600 சுவிசேஷப் புத்தகங்கள், 550 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 5:</u> சகோதரி கஸ்தூரி சுப்பையா, மேரி மீனா, ரூத் பகவதி, மரியாள்.**

நாங்கள் 13 கிராமங்களில் சுற்றித் திரிந்து வீடுவீடாக யோவான் புத்தகம், சிலுவைக்கொடி, கைப்பிரதி கொடுத்த போது சிலர் வேண்டாம் என்றார்கள். பலர் கேட்டு வாங்கினார்கள். R.T.மலை என்ற கிராமத்தில் ஒரு அர்ச்சகர் பிராமணரிடம் யோவான் புத்தகம் கொடுத்தபோது, மிகவும் சந்தோஷமாக வாங்கினார். அவரை நாங்கள் ஆசீர்வதித்தபோது அதிகமாக மகிழ்ந்தார். சங்ககவுண்டன் பட்டியில் ஒரு டாக்டருக்கு யோவான் புத்தகம் கொடுத்தபோது மிகவும் ஆசையோடு வாங்கினார். புழுதேரி கிராமத்தில் தாமரை என்ற பெண் ஆர்வமாக சத்தியத்தைக் கேட்டாள். அதே போல்ல மணிமேகலை, மகேஸ்வரி என்ற பெண்களும் ஆர்வமாக சத்தியத் தைக் கேட்டு ஜெபிக்கவும் கூறினர். மொத்தம் 502 சுவிசேஷப் புத்தகங்கள், 500 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 6:</u> சகோதரி மேரி செல்லாபாய். மணியம்மாள், லீதியாள், தேவகிருபை, சலோமி சம்மனசு.**

நாங்கள் 5 கிராமங்களில் வீடுகள் தோறும் யோவான் புத்தகம் கொடுத்த போது, யாரும் வேண்டாம் என்று சொல்ல வில்லை. இரண்டு கரங்களையும் நீட்டி வாங்கினர். கொத்தட்டை கிராமத்தில் ஒரு இந்து வீட்டில் எங்களுக்கு மதியம் ஆகாரம் கொடுத்து உபசரித்தார்கள். அவர்களுக்காக ஜெபித்தோம். பஸ் ஸ்டாப்பில் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபனுக்கு சத்தியம் சொன்னபோது, சந்தோஷமாக கேட்டு, தன் முகவரியை தந்து புத்தகம் அனுப்ப சொன்னார். 860 சுவிசேஷப் புத்தகங்களும், 515 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**<u>குழு 7:</u> சகோதரி எஸ்தர் கனகாம்புஜம், கிளமெண்ட்ஸ்மேரி, பிச்சையம்மாள், தேவநேசம், மீரா அம்மாள்.**

சுண்ணாம்புக்காரன்பட்டியில் ஊழியம் செய்தபோது, ஒரு ஆள் எங்களை இங்கு வரக்கூடாது. மதம் பரப்புவதற்கு வந்தீர்களா ? எங்கள் தெய்வத்தை யார் வணங்குவது என்று பேசி எங்களை அந்த கிராமத்தை விட்டு வெளியே விரட்டினார். மற்றவர்கள் அன்புடன் சத்தியத்தை ஏற்றுக் கொண்டார்கள். மொத்தம் 650 சுவிசேஷப் புத்தகங்கள், 465 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 8:</u> சகோதரி வசந்தா ஸ்டீபன், அன்னக்கிளி, ரூத்மேரி, அன்னாள்.**

முத்துநகர், நௌபா நகர், சரவணாபுரம், சரவணாபுரம் காலனி, கீழமேடு, மேலமேடு கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்தபோது, யாவரும் ஆர்வமாக வாங்கிக் கொண்டு, சுவிசேஷத்தைக் கேட்டார்கள். 600 சுவிசேஷப் புத்தகங்கள், 465 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு 9:</u> சகோதரி டோரா லாசர், அந்தோணிமேரி,ஷீலா,சமாதானமேரி.**

எட்டரை ஊராட்சியிலுள்ள கிராமங்களில் யோவான் புத்தகம் கொடுத்தோம். ஒரு சிலர் இது என்னது என்று கேட்டு ஆர்வத்தோடு வாங்கினர். ஒரு வீட்டில் புத்தகம் கொடுத்தபோது, ஒரு பெண் இது இயேசு புத்தகம், இதை வாங்காதீங்க, மண்டக்குத்து வரும் என்றாள். காய்ச் சலாக படுத்திருந்து ஒரு பையனுக்காக ஜெபித்தோம். உடனே சுகமாகி எழும்பி விட்டான். சிலர் கூடியிருந்த இடத்தில் இயேசுவைப் பற்றி சொன்ன போது, அனைவரும் ஏற்றுக் கொண்டனர். 585 சுவிசேஷப் புத்தகங்களும், 550 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 10: சகோ. மாற்கு மாரியப்பன், சாம்ராஜ், மகாராஜன், ஜெயபால்.**

மேலபாண்டமங்கலம், லிங்கபுரம், மருதாண்டக்குறிச்சி,முருங்கைப்பேட்டை கிராமங்களில் வீடுவீடாக சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, சத்தியத்தைக் கூறினோம். ஒரு சில வியாதியுள்ளவர் களுக்காக ஜெபித்தோம். ஒரு வீட்டில் புத்தகம் கொடுத்தபோது, அங்கிருந்த ஒரு சகோதரியை பார்த்து நன்றாக இருக்கிறீர்களா? என்று கேட்டதற்கு உடனே அந்த பெண்ணின் கணவன் என்னடா சொந்தக்காரன் விசாரிப்பது போல விசாரிக்கிறாயே? உன் வேலையை பார்த்துக் கொண்டு போடா என்று திட்டினார். வேறு ஒரு பெண் எங்களைப் பார்த்து உங்களுக்கு வேறு வேலை இல்லையா? என்று கேட்டாள். மொத்தம் 662 சுவிசேஷப் புத்தகங்களும், 550 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு 11: சகோ.ஆரியப்பன், சூசை மாணிக்கம்,பெஞ்சமின், ஸ்டீபன்ராஜ்.**

மருதாண்டக்குறிச்சி ஊராட்சியிலுள்ள கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து, யோவான் புத்தகம் கொடுத்தோம். மல்லியம்பத்து கிராமத்தில் நாகரத்தினம் என்ற முதியவர் சுவிசேஷ செய்தியைக் கேட்டு தன்னை கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்தார். பாக்கியம் என்ற டெய்லர் பெண்ணிடம் இரட்சிப்பின் வஸ்திரம் பெற வேண்டும் என்று கூறியபோது அவர்கள் சந்தோஷமாக கேட்டார்கள்.

**குழு 12: சகோ.பிரேம் ஆனந்த், அந்தோணி, ஜான் முத்துமணி, செல்வராயர் பால்**

பேரூர், ஏகிரிமங்கலம் கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தபோது மதப் பிரச்சாரம் செய்து மதமாற்றம் செய்ய வந்துள்ளீர்களா? என்று சொன்னவருக்கு இயேசு ஒருவர் தான் மனிதர்களின் பாவங்களுக்கு உண்டான தண்டனையை தானே ஏற்றுக் கொண்டு சிலுவையில் தன் ஜீவனைக் கொடுத்து மரித்தார். இதனால் தான் அவரை நம்புகிறவர்களுக்கு பாவ மன்னிப்பு இலவசமாக கிடைக்கிறது, பரலோகமும் செல்ல முடியும் என்று சொன்னபோது அவர் அதை ஆம் என ஒப்புக்கொண்டு புத்தகத்தை பெற்றுக் கொண்டார். 685 சுவிசேஷப் புத்தகங்கள், 600 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**குழு 13: பாஸ்டர் அமல்ராஜ், சுகோ.இஸ்ரவேல், ஜேசுதாஸ்,**

குழுமணி கிராமத்தில் ஊழியம் செய்தபோது மணிபாரதி என்ற கோவில் பூசாரியை சந்தித்து, சுவிசேஷம் சொல்லி புத்தகம் கொடுத்தோம். அன்போடு ஏற்றுக் கொண்டு, அவர் வீட்டிற்கு அழைத்து சென்று அவரது அம்மாவுக்கும், சகோதரனுக்கும் ஜெபிக்கச் சொன்னார். ஜெபித்தோம். ஒரு பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த ஒரு பிராமணர் எங்களை கூப்பிட்டு அது இயேசு புத்தகமா? எனக்குத் தாருங்கள். இது கடவுளுடைய வார்த்தையுள்ள புத்தகம் இதை ஏற்றுக் கொள்கிறேன். என்னை ஆசீர்வதியுங்கள் என்று கேட்டார். ஒரு சத்துணவு மையத்தில் இருந்த பிள்ளைகள் ஆர்வமுடன் சிலுவைக் கொடிகளை எங்களிடமிருந்து வாங்கி அதைப் பிடித்துக் கொண்டு வரிசையாக நடந்து போனார்கள். 600 சுவிசேஷப் புத்தகங்களும், 670 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

**நன்றி!**

2008ம் ஆண்டில் தியாகத்தோடு கிராமங்களில் நடந்து, திரிந்து ஊழியம் செய்த 100–கிராம ஊழிய தன்னார்வத் தொண்டர்களுக்கும், 100–கிராம ஊழியத்திற்கு உதவி செய்த யூனியன் பாஸ்டர்கள் மற்றும் சபை மக்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகுக!

***கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!***

# ✷ இயேசு கிறிஸ்துவே கர்த்தர் ✷

## துதி, கனம், மகிமை - இயேசு கிறிஸ்துவுக்கே!

### விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1. Bro. **ஆனந்தகூத்தன், நாகை.**

என் மகளின் பிரசவத்திற்காக ஜெபிக்கக் கேட்டிருந்தேன். நீங்களும் ஜெபித்தீர்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சுகபிரசவத்தில் பெண் குழந்தையை தந்தார். தேவனுக்கே மகிமை.

2. Sis.**எஸ்தர் ராணி, நெல்லை.**

உங்கள் ஜெபத்தின் மூலம் கர்த்தர் ஒரு ஆண்குழந்தையை தந்தார்.

3. Sis.**ஏஞ்சல் மகிழா, நாகர்கோவில்.**

நான் MSc.Bioinformaties படிக்கும்போது ஒவ்வொரு பரீட்சை நேரத்திலும் TVGM அறிமுகப்பணி அலுவலக சகோதரிகளிடம் ஜெபிக்கக் கூறினேன். அவர்களும் ஜெபித்தார்கள். நான் Distinction-ல் தேர்ச்சி பெற கர்த்தர் கிருபை செய்தார். அதுமட்டுல்ல நான் படித்து முடித்தவுடன் ஒரு கல்லூரியில் பேராசிரியை பணியும் கிடைத்தது.

3. Bro.**ராஜா, விருதுநகர்.**

உங்களுடைய 100–கிராம ஊழியம் என்ற மாதஇதழ் என் இதயத்திற்கு ஜீவனைத் தருகிறது.

4. Mrs.**ராஜாமணி, காஞ்சிபுரம்.**

நாங்கள் துக்கத்தோடு இருந்த நேரத்தில் தங்கள் மாதஇதழில் வந்த வார்த்தை என்னைத் தேற்றியது.

5. Bro.**குப்புசாமி, திருவண்ணாமலை.**

உங்களுடைய மாதஇதழ் எனது ஆன்மீக பதியை தீர்ப்பதாக உள்ளது.

**பத்திரிக்கை வாசகர்களே!**

“100–கிராம ஊழியம் ” மாதஇதழ் மூலம் நீங்களும் பெற்றுக் கொண்ட நன்மைகளை எங்களுக்கு எழுதுங்கள்.

### புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1. Sis.**சண்முகபிரியா, விருதுநகர்.**

நான் +2 படிப்பு முடித்து 2 ஆண்டுகளாக கல்லூரியில் சேர முடியாமல் பல தடைகள் காணப்பட்டது. தங்களுக்கு ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு தடைகளை நீக்கி இந்த வருடம் கல்லூரியில் B.Com. படிக்க கிருபை செய்தார்.

2. Sis.**அழகேஸ்வரி, தஞ்சாவூர்.**

நான் M.Com தேர்விலும் தட்டச்சுத் தேர்விலும் வெற்றி பெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் இரண்டிலும் வெற்றி பெற கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை.

**2009 ஜனவரி மாத இயேசுவை விரும்புவோர் முகாம்**

மாவட்டம் : நாமக்கல்
யூனியன் : ராசிபுரம்
நாள் : 17.01.2009 சனி
நேரம் : காலை 9 மணி

**நடைபெறும் இடம்**

**பாஸ்டர் . C. ரவி ஜான்சன்**
**இம்மானுவேல் ஏ.ஜி.சர்ச்,**
**V.நகர்,**
பெரியசாமி டீக்கடை பஸ் ஸ்டாப் அருகில்,
**ராசிபுரம் – 637 408.**
**நாமக்கல் மாவட்டம்.**
**செல் : 9443622070**

**குறிப்பு :** ராசிபுரம் யூனியனில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொள்ள வாஞ்சிக்கும் அனைவரும் இந்த முகாமில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

## TVGM ஒரு கிறிஸ்தவ தலைமைத்துவ மையம் அமைக்க திட்டமிடுவது ஏன்?

கடந்த 30 வருடங்களாக TVGM தலைமை அலுவலக வளாகத்திலேயே ஒரு பயிற்சி மையம் அமைத்து கிராம விசுவாசிகளுக்கென தற்சமயம் சீஷத்துவ பயிற்சி மையம் (D.T.I) என அழைக்கப்படும் TVGM பயிற்சி நிலையம் (T.T.I) ஒரு மாத பயிற்சி அளித்து வருகிறது. இந்த ஒரு மாத பயிற்சியில் பங்கு பெற்ற மாணவரில் அநேகர் மேற்கொண்டு மற்ற வேதாகம கல்வி நிலையங்களில் படித்து சொந்தமாக ஸ்தாபனங்கள் அமைத்து சிறந்த கிறிஸ்தவ தலைவர்களாக விளங்குகிறார்கள்.

இதுதவிர TVGM சமூகசேவை 14 ஆண்டுகளாக சிறுவர் இல்லம் நடத்தி வருகிறது. அதில் இந்த ஆண்டு மேல்நிலைக் கல்வி முடித்து, அடுத்த கல்வியாண்டில் கல்லூரிகளில் சேர இருக்கும் சிறுவர்களும் உண்டு. அவர்களை மேற்படிப்பிற்காக கல்லூரிக்கு அனுப்பி, பின்னர் கிறிஸ்தவ தலைவர்களாகும் வகையில் பயிற்சி அளித்து அல்லது இத்தனை ஆண்டுகளாக எங்கள் பராமரிப்பில் இருந்தபடியால் அவர்கள் வாழப் போகும் பகுதியில் சிறந்த சாட்சிகளாக திகழ அனுப்ப திட்டமிட்டுள்ளோம்.

அநேக ஆண்டுகளுக்குப் பின், TVGM ஊழிய கனிகள் ஆங்காங்கே சிறந்த கிறிஸ்தவ தலைவர்களாக திகழ்வதைப் பார்க்கும்போது மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். அதிலும் **நம் சிறுவர் இல்லப் பிள்ளைகள்** கல்லூரிப் பட்டதாரிகளாகி இன்னும் 3-5 வருடங்களில் அவ்வித தலைவர்களாக திகழ திட்டமிட்டு இவ்வித **தலைமைத்துவ மையம்** அமைக்க உள்ளோம். எனவே இவ்வித எதிர்கால திட்டத்திற்காக நிலங்கள் வாங்க முதற்கட்ட நடவடிக்கை எடுத்து வருகிறோம். கிறிஸ்தவ தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி இதுபோல காரியங்களைத் திட்டமிடுகிறோம். வருகிற மாதங்களில் இன்னும் அதிகமான காரியங்களை விளக்கமாக எழுதுவேன்.

***. . . Stephen Christopher.***

## 2008 நவம்பர் மாத இயேசுவை விரும்புவோர் முகாம் அறிக்கை

கர்த்தருடைய கிருபையினால் 15.11.2008 அன்று தோவாளை **"கிறிஸ்துவின் கிருபை ஊழியங்கள்"** சபையில் இயேசுவை விரும்புவோர் முகாம் நடந்தது. முகாம் முடியும் தருவாயில் ஒரு சகோதரி மட்டும் வந்தார்கள். பாஸ்டர் ஜான் E. கிறிஸ்டோபர் மற்றும் அந்த சபையினர் நாம் கொடுத்த விலாசதாரர்கள் 157 பேரையும் வீடுகளில் போய் சந்தித்திருக்கிறார்கள்.

முகாம் நடத்தின நாள் ஒரு வேலைநாளாக இருந்தபடியால், அநேகர் கூலி வேலைக்கு செல்வதால் வர இயலவில்லையென்றும் மற்றபடி அந்த சபைக்கு அநேகர் வர ஆரம்பித்துள்ளார்கள் என்றும் அங்குள்ள ஊழியர்கள் கூறினார்கள். தொடர்ந்து அங்கு **"கிறிஸ்துவின் கிருபை ஊழியங்கள்"** சபை மூலம் பின்தொடர்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த 157 விலாசதாரர்களும் இயேசுவின் பிள்ளைகளாக மாற ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# 2008ல் TVGM ஊழியங்கள் மூலம் வல்லமையுடையவர் செய்த மகிமையான காரியங்கள்!

துதியுங்கள்

**கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.** சங்கீதம் 118:23.

**1. 100-கிராம ஊழியம்:-**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் 2008 ஜனவரி முதல் நவம்பர் வரை தமிழ்நாட்டிலுள்ள 11 யூனியன்களில் 100-கிராம ஊழியம் தடையில்லாமல் நடைபெற்றது. இந்த ஊழியத்தின் போது 1,14,022 யோவான் சுவிசேஷப் புத்தகங்களும்,1,86,000 கைப்பிரதிகளும், 1,04,090 சிலுவைக்கொடிகளும் கிராமங்களில் இலவசமாக வழங்கப்பட்டன. இவ்வாறாக கிராமங்களில் இயேசுவின் நாமத்தை அறிவிக்க கிருபை செய்த தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**2. பின்தொடர்பணி ஊழியம்:-**

100 கிராம ஊழியத்தின்போது சந்தித்த 1755 புறமத நண்பர்களுக்கு தபால் மூலம் வேதபாடங்கள் அனுப்பப்பட்டு பின்தொடர் பணி நடைபெற்றது. இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**3. இயேசுவை விரும்புவோர் முகாம்:-**

100 கிராம ஊழியம் நடைபெற்ற இடங்களில் அதைத் தொடர்ந்து இயேசுவை விரும்புவோர் முகாம் நடைபெற்றது. இதன் மூலம் 33 புறமத நண்பர்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். இவர்களுக்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**4. சீஷத்துவப் பயிற்சி:-**

2008 ஏப்ரல் 25 முதல் மே 23 வரை டி.வி.ஜி.எம்.தலைமை அலுவலகம், சோமரசம்பேட்டையில் சீஷத்துவப் பயிற்சி நடைபெற்றது. இதில் 6 பேர் கலந்து கொண்டார்கள். இவர்களுக்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**5. ஆலயமில்லாத கிராமங்களில் ஜெபவீடு கட்டுதல்:-**

2008ம் ஆண்டில் ஆர்ச்சம்பட்டி, கொட்டப்பட்டு, வாழவந்தான்கோட்டை, முல்லைநகர், கீரனூர், சந்தோஷ்நகர், தா.பளூர், காட்டூர், நௌஃபா நகர், கலைஞர் நகர், கல்கண்டார்கோட்டை, தாயனூர், பூசாரிப்பட்டி, விஸ்வகர்மாநகர், கொங்குப்பட்டி, சிரமேல்குடி, லேனாவிளக்கு, விருகாவூர், பெருமாள்நகர், சோமரசம்பேட்டை, அண்டகுளம், கோடாவிளை, மிஞ்சூர், வையப்பமலை, சென்னிமலை, முத்துநகர், கும்மனந்தொழுவு, கோழிக்கால் நத்தம் ஆகிய ஆலயமில்லாத 28 கிராமங்களில் ஜெபவீடுகள் கட்டி தேவனுடைய நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள். விசேஷமாக இவைகளில் 12 ஜெபவீடுகள் ***Yishun Evangelical Church*** ( Singapore) சபை போதகர் **ஜோசப் ஜெபமணி** அவர்கள் மூலம் கட்டப்பட்டது. இவர்களுக்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**6. தலைமை அலுவலக கட்டுமானப்பணி:-**

2008ம் ஆண்டில் டி.வி.ஜி.எம். தலைமை அலுவலக காம்பவுண்டில் நிர்வாக அலுவலக கட்டிடத்தை கட்டுவதற்கும், மேலும் ஊழியர் குடும்பங்கள் தங்குவதற்கு வசதியாக ஏற்கெனவே உள்ள கட்டிடத்திற்கு மேலே ஒரு கட்டிடத்தை கட்டி முடிக்க கர்த்தர் கிருபை செய்தார். இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**7. ஆதரவற்ற பெண்கள் முதியோர் இல்லம்:-**

2008 நவம்பர் 2ம் தேதி திருநெல்வேலி – கோடாவிளை கலிலேயா காம்பவுண்டில் ஆதரவற்ற பெண்களுக்கென்று ஒரு இல்லத்தை கட்டி பிரதிஷ்டை செய்ய கர்த்தர் கிருபை செய்தார். இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**8. சிறுவர் இல்லம்:-**

திருச்சி மற்றும் திருநெல்வேலி – குண்டல் சிறுவர் இல்லத்திலுள்ள 75 பிள்ளைகளையும் கர்த்தர் இந்த ஆண்டு கிருபையாக பாதுகாத்து, தேவைகளை சந்தித்தார். விசேஷமாக குண்டல் சிறுவர் இல்லத்திற்கென்று சொந்தமாக ஒரு கட்டிடத்தை கட்டும்படியாக கர்த்தர் கிருபை செய்தார். இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**9. கலிலேயா முகாம்:-**

2008 அக்டோபர் 10,11, 12 ஆகிய தினங்களில் கோடாவிளையில் கலிலேயா முகாம் நடைபெற்றது. அந்த சுற்றுவட்டாரப் பகுதியிலுள்ள அநேகர் இதன் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**10. பத்திரிக்கை ஊழியம்:-**

2008ம் ஆண்டில் "100–கிராம ஊழியம், தமிழ் கிராமங்களுக்கு சுவிசேஷம்" ஆகிய இரண்டு பத்திரிக்கைகளும் தடையில்லாமல் 12 மாதங்களும் வெளிவர கர்த்தர் கிருபை செய்தார். தேவைகளை சந்தித்தார். இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**11. நாகர்கோவில் அறிமுகப்பணி அலுவலகம்:-**

2008ம் ஆண்டு முழுவதும் அறிமுகப்பணி செய்த சகோதர, சகோதரிகளை கர்த்தர் பாதுகாத்துக் கொண்டார். டி.வி.ஜி.எம். ஊழியத்திற்கு அநேக புதிய தொடர்புகளை ஏற்படுத்தித் தந்தார். இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**12. டி.வி.ஜி.எம். சமூக சேவை:-**

**இலங்கை அகதிகள் முகாம் :** 2008ம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள தோப்புகொல்லை, அழியாநிலை, தேக்காட்டூர் ஆகிய 3 இலங்கை அகதிகள் முகாமிலுள்ள 4000 பேருக்கு ரூ.175/- மதிப்புள்ள அத்தியாவசியான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது. மேலும் சேலம் மாவட்டம் – தாராமங்கலம் அருகிலுள்ள அத்திக்காட்டனூர் அகதிகள் முகாமிலுள்ள 56 குடும்பங்களுக்கு சிறப்பு விருந்தளிக்கப்பட்டது. இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**ஏழைகளுக்கு சிறுதொழில் :** சேலம் மாவட்டம் – கொங்குப்பட்டி கிராமத்தில் ஏழைகளுக்கு தொழில் செய்வதற்காக ஓலை ஷெட் அமைத்து, 5 கைத்தறி இயந்திரங்கள் வாங்கி கொடுக்கப்பட்டது. இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**விதவைகள் மற்றும் தொழுநோயாளர் உதவி:** திருச்சி மாவட்டம் சூறாவளிப்பட்டியிலுள்ள ஏழை விதவைகளுக்கும், பஞ்சப்பூரிலுள்ள தொழுநோயாளர்களுக்கும் அவ்வப்போது உணவுப் பொட்டலங்கள், இனிப்புகள் வழங்கப்பட்டன. வீடு பழுதாய் போனவர்களுக்கு புதுப்பித்துக் கொடுக்கப்பட்டது. சிறுசிறு மருத்துவ உதவிகள் செய்யப்பட்டன. இதற்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

இப்படியாக 2008 ஆண்டு முழுவதும் கர்த்தர் தமது ஊழியங்களை நிறைவேற்ற எங்களுக்கு கிருபைக் கொடுத்தார். இவ்வளவு மகிமையான காரியங்களை செய்த தேவாதி தேவனை துதித்து மகிமைப்படுத்திக் கொண்டேயிருங்கள். ஜெபித்த, கொடுத்த, உழைத்த ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**என்னோடேகூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்;**
**நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக.** சங்கீதம் 34:4.

**சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான். சங்.42:1**

**2009 ம் ஆண்டில் உங்கள் பிறந்த நாள், திருமணநாளை விசேஷமான முறையில் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளோடு கொண்டாட அற்புதமான வாய்ப்பு!**

பகல் அல்லது இரவு உணவு 80 பேருக்கு

**வெஜிடெபிள் உணவு(வடை, பாயாசத்துடன்) ரூ. 2500/–**
**சிக்கன் பிரியாணி ( பாயாசத்துடன்) ரூ.3000/–**
**மட்டன் பிரியாணி ( பாயாசத்துடன்) ரூ.5000/–**

உங்கள் வசதிக்கு ஏற்றாற்போல் கொடுக்கும் பணத்திலும் பிள்ளைகளுக்கு உணவு வழங்கப்படும். நீங்களும் குடும்பமாக நேரில் வந்து பிள்ளைகளின் நடனம், சாட்சிகளைப் பார்த்து, கேட்டு, பிள்ளைகளோடு சேர்ந்து உணவருந்தி உங்கள் நேரத்தை மகிழ்ச்சியான முறையில் செலவிடலாம். நேரில் வர முடியாவிட்டாலும் பணத்தை டிராப்ட், செக் அல்லது மணியார்டர் மூலம் அனுப்பலாம். உங்கள் ஜெபக்குறிப்புகளையும் அனுப்பி வையுங்கள். பிள்ளைகள் உங்களுக்காக ஜெபிப்பார்கள். அந்நாளில் எடுக்கப்படும் புகைப்படங்களை அனுப்பி வைக்கிறோம். நீங்களும் பார்த்து மகிழலாம்.

**சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்காக ஜெபியுங்கள்! தாங்குங்கள்!**

திருச்சி மற்றும் குண்டல் சிறுவர் இல்லத்தில் 75 பேர் படிக்கிறார்கள். இவர்களுக்கு தங்குமிடம், உணவு, படிப்பு இலவசமாக வழங்கப்படுகிறது. ஒரு பிள்ளைக்கு ஒரு மாதத்திற்கு ரூ.1000/– தேவைப்படுகிறது. இன்னும் 27 பிள்ளைகளை மாதந்தோறும் தாங்குவதற்கான கர்த்தருடைய பிள்ளைகள் தேவை. ஜெபியுங்கள்.

**இப்படிப்பட்ட ஒரு பிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான்.** மத்தேயு 18:5

## நாட்டு நடப்புச் செய்திகள்

1. ‘108’ எண்ணை தொடர்புகொண்டால் இன்டெர்நெட் மூலம் ஆம்புலன்ஸ் சேவை பெறும் திட்டம் தமிழகமெங்கும் விரிவுபடுத்தப் படும் என தமிழ்நாடு அமைச்சர் பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.
2. இந்தியப் பங்குச் சந்தை கடும் வீழ்ச்சியை சந்தித்து வருகிறது. இதனால் முதலீட்டாளர்கள் பெரும் கலக்கத்தில் உள்ளார்கள்.
3. பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை இனிமேல் கிராம நிர்வாக அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

**தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.**

**“நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது”. யாக். 5:16**

## தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** 2009ம் ஆண்டு TVGM மூலம் 400 யூனியன்களில் ஆலய மில்லாத கிராமங்களில் 400 ஆலயங்கள் கட்டுவதற்கான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** கோடாவிளை ‘முதியோர் இல்லத்திற்கு’ தேவையான பர்னிச்சர் மற்றும் பொருள்கள் வாங்கப்பட, ஏழை முதியோர்கள் இதன் மூலம் பயன்பெற, மீதியான பகுதிகள் கட்டி முடிக்கப்பட ஜெபியுங்கள்.

**புதன்:** TVGM அறிமுகப்பணி அலுவலகத்திற்கு ( நாகர்கோவில் ) நிரந்தரமான இடம் வாங்கப்பட, அலுவலகத்தில் பணிபுரியும் 9 சகோதரிகளுக்கும் கர்த்தர் நல்ல சுக, பெலன் கொடுக்க ஜெபியுங்கள்.

**வியாழன்:** 2009 ஆண்டு ‘100–கிராம ஊழியங்கள் திட்டமிட்டபடி நடைபெற, பல லட்சக்கணக்கான மக்கள் இயேசுவை அறியவும், ஆயிரக்கணக்கான சபைகள் உருவாகவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.

**வெள்ளி:** கர்த்தருக்குச் சித்தமானால் 29.04.2009 உடன் TVGM ஊழியம் ஆரம்பித்து 30 வருடங்கள் முடிவடை கிறது. இதற்கு ஒரு சிறப்பு ஸ்தோத்திரக் கூட்டம் ஒழுங்குப்படுத்தப்படவும், **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபருக்கு** கர்த்தர் புதிய கிருபைகளையும், ஞானத்தையும் கொடுக்கவும் ஜெபியுங்கள்.

**சனி:** கர்த்தருக்குச் சித்தமானால் மே 1 முதல் TVGM புதிய கமிட்டி அமைக்கப் படவும், தரிசனம் பெற்ற கர்த்தருடைய பிள்ளைகள் நிர்வாக கமிட்டியில் இணைக்கப்படவும் ஜெபியுங்கள்.

**ஞாயிறு:** TVGM ஊழியத்திற்காக ஜெபித்து, கொடுத்து, உழைத்து வரும் அனைத்து பிள்ளைகளையும் கர்த்தர் ஆசீர்வதிக்கவும், புதிய ஆதரவாளர்கள், தன்னார்வத் தொண்டர்கள், முழுநேர ஊழியர்களை கர்த்தர் எழுப்பவும் ஜெபியுங்கள்.

## கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு காணிக்கை அனுப்பும் முறை

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)

**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)

**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம்)

ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து

**MR. STEPHEN CHRISTOPHER, SB 1249101 18538 CANARA BANK,**

**Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu.**

**என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, கடைசி பக்கமுள்ள TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**

**எங்கள் Email: 100village@tvgm.org- மூலம் தெரியப்படுத்துங்கள்.**

**Canara Bank Indian Financial System Code( IFSC ):CNRB 0001249**

## 2008-ம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்ட TVGM அறிமுகப்பணி அலுவலக ஊழிய அறிக்கை

கர்த்தருடைய கிருபையினால் 2008ம் ஆண்டு ஊழியங்கள் ஆசீர்வாதமாக நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். ஊழியத்தின் எல்லையை விரிவடையச் செய்தார். 2008 மார்ச் மாதத்தில் நெய்யூரில் தரிசனமுகாம் ஒன்றை நடத்தவும், இதன் பலனாக 10 ஜெபக்குழுக்களையும் கர்த்தர் தந்திருக்கிறார். ஜுலை மாதத்தில் தோவாளை யூனியனில் 100–கிராம ஊழியம் நடைபெற்றது. 139 கிராமங்களில் யோவான் சுவிசேஷம் வழங்கப்பட்டது. 157 புறமதநண்பர்களின் விலாசங்கள் கிடைத்தது. அநேக சபைகளில் அறிமுகப் பணி செய்ய கர்த்தர் கிருபை செய்தார். சுவிசேஷஊழியம் செய்ய ஆர்வமுள்ள தாய்மார்களை கர்த்தர் தந்தார். வெள்ளிக்கிழமைதோறும் நடைபெறும் உபவாச ஜெபத்தின் மூலம் அநேக ஜீவனுள்ள சாட்சிகளை கர்த்தர் எழுப்பினார்.

இரவு – பகல், வெயில் – மழை கருதாது தியாகமாக ஊழியம் செய்யும் சகோதரிகளை கர்த்தர் தந்தபடியால் தடையில்லாமல் ஊழியங்கள் நடைபெற்றது. ஊழியங்களுக்காக ஜெபித்த, கொடுத்த ஒவ்வொரு குடும்பத்தினரையும் தேவன் தாமே ஆசீர்வதிப்பாராக! **தேவனுக்கே மகிமை.**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001.
**செல் : 98658 26424**
**போன் : 04652- 277251.**

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்,**
ஒருங்கிணைப்பாளர்.
கன்னியாகுமரி மாவட்டம்.

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

POSTAL REGISTRATION NUMBER
TN / TR / 17 / 2006 - 2008 ( Inland )
LICENCED TO POST WITHOUT PREPAYMENT
TN / TR / 09 / WPP ( Inland ) Posting Date 25th at H.P.O. Trichy.

## TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகள் உங்களுக்கு புத்தாண்டு வாழ்த்துதல்களை கூறுகிறார்கள்!



2008ம் ஆண்டில் தங்களுடைய பிறந்த நாள், திருமண நாள் மற்றும் விசேஷித்த நாட்களில் சிறுவர் இல்லப் பிள்ளைகளை நேரடியாக வந்து பார்வையிட்டு, சிறுவர் இல்ல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அல்லது காணிக்கைகளை அனுப்பி சிறப்பு விருந்தளித்தவர்களுக்கும், மற்றும் அவ்வப்போது இனிப்புகள், நோட்டுப் புத்தகங்கள், பென்சில்கள், விளையாட்டுப் பொருட்கள் வழங்கிய கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் TVGM சிறுவர் இல்லப் பிள்ளைகளின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**2009ம் ஆண்டிலும் உங்கள் அன்பும், ஆதவும், ஜெபமும் தேவை!**

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**


**TVGM தலைமை அலுவலக முகவரி**

**ஜெபஉதவி மற்றும் சகல தொடர்புகளுக்கும்:-**

MR.STEPHEN CHRISTOPHER,
CHIEF EXECUTIVE OFFICER
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
100- VILLAGE ( Veeranginallur Road )
SOMARASAMPETTAI,(Hospital Stop)
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0-431 - 2607241
FAX : 0-431- 2607446
Email :
100village@tvgm.org


*Website :*
**www.tvgm.org**
தினசரி வாக்குத்தத்தம், செய்தி மற்றும் கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.


REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011


HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹണ്ട്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി हन्ड्रेड विलेज मिनिस्ट्री